

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின்கீழ், நிவாரணத்தொகையாக ரூ. ஒரு இலட்சத்திற்கான காசோலையினை திருமதி. புஷ்பலீலி- யிடம் மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (30.05.2016) வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ்.இளங்கோ, தமிழ்நாடு மாநில மீன்வளக் கூட்டுறவு இணையத்தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன், மீன்வளத்துறை உதவி இயக்குநர் திரு. எஸ். ரூபர்ட் ஜோதி ஆகியோர் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 305/2016 நாள்: 30.05.2016

**கன்னியாகுமரி மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின்கீழ், நிவாரணத்தொகையாக ரூ. ஒரு இலட்சத்திற்கான காசோலையினை பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், இன்று (30.05.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (30.05.2016) நடைபெற்றது.

திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மீனவர்களின் நலன் கருதி பல்வேறு நலத்திட்ட உதவிகளும், மீன்பிடி தடைக்காலத்தில் ரூ.2 ஆயிரமும், மீன்பிடி குறைந்த காலத்தில் ரூ. 4 ஆயிரமும் நிவாரண தொகையாக வழங்கி வருகிறார்கள். மேலும் மீன் பிடித்தொழிலில் ஈடுபடும்போது மீனவர் மரணமடைந்தால் மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின்கீழ் நிவாரணத்தொகையும் வழங்க ஆணையிட்டுள்ளார்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கீழ குறும்பனை மீனவர் கிராமத்தை சார்ந்த திரு. தோ. சகாயராஜ் (த/பெ. தோமாஸ்) என்பவர் 14.01.2014 அன்று கேரளா மாநிலம் மரியநாடு என்னும் இடத்தில் மீனவர்களுடன் மீன் பிடித்து கொண்டிருக்கும்போது கடல் சீற்றத்தால் வள்ளத்தில் தடுமாறி கடலில் விழுந்து மரணமடைந்தார். அன்னாரது வாரிசுதாரரும், மனைவியுமான திருமதி. புஷ்பலீலி என்பவரிடம் மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின்கீழ், ரூ. ஒரு இலட்சத்திற்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் இன்று (30.05.2016) வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ்.இளங்கோ, தமிழ்நாடு மாநில மீன்வளக் கூட்டுறவு இணையத்தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன், மீன்வளத்துறை உதவி இயக்குநர் திரு. எஸ். ரூபர்ட் ஜோதி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு. தி. சுப்பையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.